★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 கார்த்திகை 15 ரபி-அவ். 6 இதழ் 288
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30 11-84

★ தனியார் வாகனங்களுக்குத் தடை ★ தனியார்பஸ்சேவையும்இல்லை ★ மன்னர்-முல்லைத்தீவு கரையோரப் பகுதி தடைப் பிரதேசம் ★ பாடசாலைப் பிள்ளைகளுக்கு நேரக் கட்டுப்பாடு ★ வெளியாரை வீட்டில் வைத்திருக்க அனுமதி பெறவேண்டும் ★ எரிபொருள் விநியோகம் கட்டுப்பாடு.

# யாழ்மாவட்டத்தில்கடுமையான பாதுகாப்பு நடவடிக்கை!

## உடன் அமுலுக்கு வருவதாக அறிவிப்பு!

### ஊரடங்குச் சட்டமும் (4-6) தொடர்ந்து அமுலிலிருக்கும்

(இ. கந்தசாமி)

**பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலை முறியடிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அறிவித்துள்ளார்.**

விபரம் வருமாறு:-

மன்னரிலிருந்து முல்லைத்தீவு வரையிலான கரையோரப் பகுதிகள் தடைசெய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனம்செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் எவரும் தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்தக் கூடாது.

யாழ்ப்பாண நகருக்குள்செல்வதற்கும், அங்கிருந்து வெளியேறுவதற்கும் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே அனுமதியுண்டு.

பாதுகாப்பு வலயங்களுக்குள் பிரவேசிப்பதற்கு அரசாங்க அதிகாரிகளிடமிருந்துஅனுமதி பெறவேண்டும்.

வீடுகளுக்கு அருகில் குண்டுகள் அல்லது வெடிமருந்துகள் இருந்தால், அதுபற்றிப் பாதுகாப்புப் படையினரின் கவனத்துக்குக் கொண்டு வருதல் வீட்டுச் சொந்தக்காரரின் கட்டாய கடமையாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

பயங்கரவாதிகளிடமிருந்து எதிர்நோக்கப்படும் அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்குஇந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு நடவடிக்கை குறித்து தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி நேற்று அறிவித்தார்.

தேசிய பந்தோபஸ்து உள்நாட்டுப் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு நேற்று பாராளுமன்றத்தில்விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி உரையாற்றினர்.

மன்னரிலிருந்து முல்லைத்தீவு வரையான கரையோரப் பகுதி தடைசெய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக அவர் அறிவித்தார்.

''கடற்கரையிலிருந்து 100 மீட்டர் தூரத்துக்கும் தடைசெய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுளளது.

ஊர்காவற்றுறை, நயினதீவு ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களின் பிரயாணத்துக்குவசதியான விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

''யாழ் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகியவற்றிலுள்ள சகல கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக இந்தத் தடைசெய்யப்பட்ட வலயம் அமைந்திருக்கும். ஆனையிறவுக்குவடக்குத்திசைவரை இது விஸ்தரிக்கப்பட்டிருக்கும்அரசாங்க அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட அனுமதியின்றி யாழ் மாவட்

(8ம பக்கம் 2ம் கலம் பார்க்க)

---

### சிவாஜிக்கு ரஜீவ் அழைப்பு

[புதுடில்லி]

இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய திரு. சிவாஜி கணேசனையும், சிவாஜி ரசிகர் மன்றத்தின் இரு நிர்வாகிகளையும் புதுடில்லி வருமாறு இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி அழைப்பு விடுத்துள்ளார்

இவர்கள் நேற்று புதுடில்லி செல்லவிருந்ததாகக் கூறப்பட்டது.

---

## சைக்கிள் பாவனைக்கும் அனுமதிப்பத்திரம் தேவை

(கொழும்பு)

பாதுகாப்பு வலயத்தில் மோட்டார்வாகனங்களைவைத்திருக்கும் சொந்தக்காரர்கள் உதவிப்பொலிஸ் அதிபரின் அனுமதிபெற்றே அவற்றை வைத்திருக்கவேண்டுமென்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் ரு லலித்அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயத்திலுள்ள பொதுவீதிகளில் மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் பாவிப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியிட மிருந்து அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்

(8-ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

---

## "டிச. 31க்குள் வடபகுதியிலிருந்து ராணுவம் விரட்டப்படும்"

### அறிக்கைமூலம் தீவிரவாதிகள் தெரிவித்ததாக 'லலித்' தகவல்

(கொழும்பு)

''எதிர்வரும் ஜனவரி மாதம் 14ம் திகதி தைப் பொங்கல் தினம் தமிழீழம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக அமையவுள்ளது. இன்னும் 32 நாட்களுக்குள் அதாவது டிசம். 31க்குள் வடபகுதியிலிருந்து ராணுவம் விரட்டியடிக்கப்படுமென்றும், இதற்காகத் தமிழ் நாட்டிலிருந்து பயிற்சிபெற்ற 4,000 தீவிரவாதிகள்இங்கு வரவுள்ளதாகவும்அறிக்கையொன்றின்மூலம் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். இவ் அறிக்கை மூலம் தீவிரவாதிகளின் இன்றைய நிலை மிகவும் தெளிவாக உள்ளது.''

[8ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

---

### யாழ். நகரில் நடமாடும் நேரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பொது மக்கள் 4½ மணித்தியாலங்களே நடமாட முடியும். காலை 6-00 மணி முதல் 8-30 மணிவரையும், பிற்பகல் 2 மணி முதல் 4மணிவரையுமே யாழ். நகரில் நடமாட முடியும்.

---

### குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ் அடைக்கலமாதா கோவிலுக்கு அருகாமையிலுள்ள இரு வீடுகளுக்கு நேற்று குண்டுகள் வீசப்பட்டதாகக் கூறப்பட்டது

---

## தீவிரவாதக் குழுக்கள் சேர்ந்து தாக்குதல்நடத்தலாம்

### அமைச்சர் அல்விஸ் கூறுகிருர்

[கொழும்பு]

பரந்த வடபகுதிக் கடலை முழுமையாகப் பாதுகாப்பது சிரமமானது என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்துள்ளார்

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கிய கோஷ்டி தமிழகத்துக்குத்தப்பிச்சென்றுவிட்டதாக நேற்று முன்தினம் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் தெரிவித்தபோது, கடல் கண்காணிப்புவலயத்தைத் தாண்டி எப்படிசென்றனர்என்றுநிருபர் ஒருவர் கேட்டார்

அதற்குப் பதிலளித்தஅமைச்சர், வடபகுதிக் கடல் பரந்த அளவைக்கொண்டது. இதனை முழுமையாகக் காக்கமுடியாது என்று கூறினர்

தமிழகத்திலிருந்து செயற்படும் தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம்என்பன விரைவில்இணைந்து செயற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும்,விரைவில் இவை இணைந்து தாக்குதல் நடத்தலாம் என்றும் அமைச்சர் கூறினர்.

---

### எதிர்க்கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)

இலங்கையின் ஒற்றை ஆட்சி முறையை உறுதிப்படுத்த அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன

---

## 4,800 தமிழ் இளைஞர்கள் பொலிஸ் விசாரணையில்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சில தினங்களில் சுமார் 4,800 தமிழ் இளைஞர்கள் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்

கைதுசெய்யப்பட்டவர்களில் 15 வீதமானவர்கள் கொழும்பு வந்ததற்கான சரியான காரியத்தைத் தெரிவிக்கவில்லை என்றும் பலருக்கு பயங்கரவாதச் சம்பவங்ளுடன் தொடர்பிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்புப் பொலிஸ் கமிஷனர் தெரி

[8ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

---

### ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி கைது

(கொழும்பு)

பேதுருதாலகாலையில் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் தாக்குதல் முயற்சி தொடர்பாக கொழும்பில்வசித்துவநத ஓய்வுபெற்ற தமிழ் வங்கி உயர் அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

---

காங்கேசன்துறை

## பொலிஸ் நிலையக் கட்டடம் குண்டுவைத்து தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் இயங்கி வந்த கட்டடம் நேற்று நண்பகல் இனந்தெரியாதவர்களினல் குண்டு வைத்துத் தாக்கப்பட்டது.

இக்கட்டடம் தரைமட்டமானது

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை மூடப்பட்டது தெரிந்ததே.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தஞ்சாவூர் புதிய வீணை விற்பனைக்கு வந்துள்ளது தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும். அகில இலங்கை திருமுறைமன்றம் 31/12, சங்கிலியன்வீதி, நல்லூர். 899

## வகுப்புக்கள்

A/L—2 பாடங்களுடன் எஞ்சினியராகும் வாய்ப்பு! E.C./C.E.I. (London) I and II - May 1986 ஆரம்பம் 1-12-84. J.E C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 884

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுக்குரிய Diploma in Draughtsmanship, வெல்டிங், வயறிங், மோட்டார் மெக்கானிசம், Radio and T. V. குறுகிய காலத்தில், குறைந்த கட்டணத்துடன், அனுபவமுள்ள வர்களால் பயிற்றப்படுகிறது ஆரம்பம்: 3-12-84 J. E. C 33 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 883

மானிப்பாய் வீதியில் மேல் மாடிவீடு (சகலவசதிகளுடன்) கராஜுடன் வாடகைக்குண்டு விபரங்களுக்கு:- 173 (புதிய இலக்கம்) மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். (905)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

கொழும்பு என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாரட்ணசிங்கி குணவீர சிங்கம் என்பவரின் மரண சாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்

—மரணமெய்தியவர்

மரணசாதன } இல.
நியாயாதிக்கம் } ரி/3825

சபாரட்ணசிங்கி குணவீர சிங்கம் கைம்பெண் கமலாம் பாள்.

புளக் ஈ. 1/5, அன்டசன் தொடர்மாடி, கொழும்பு-5. —மனுதார்

—எதிர்

1. குணவீரசிங்கம் மகள் முத்துமணி
2. குணவீரசிங்கம் மகள் தவமணி (பராயமற்றவர்கள்) (பராயமற்றவர்கள் தங்கள் வழக்குப் பாதுகாவலர் 3-ம் எதிர்மனுதார் மூலம்)
3. பொன்மணி சபாரட்ணசிங்கி 177, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

—எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருபிப்பதற்கான மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு தை மாதம் 4-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11-ம் திகதி நீதிமன்ற கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்

சுந்தையா நவரேந்திரன் சட்டத்தரணி 891

## விற்பனைக்கு

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் பாடசாலைகள், கோவில்கள், தபாற்கந்தோர் ஆகியவற்றிக் கண்மையில் செய்பயிர்களுடனும், நன்னீர்க் கிணற்றுடனும் 6 பரப்புக்காணி வீட்டுடன் உடனடி விற்பனைக்குண்டு தொடர்பு: A.C. மகேந்திரன், நீர்வேலிவடக்கு, நீர்வேலி. 872

## தேவை

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயத்தேர்முட்டியிலிருந்து, தேருக்குப்போகும் நுழைவாயிலை அடைக்க இரும்புச் சுருக்குக் கதவுகள் 7'X4' யில் இரண்டு தேவை, ஒப்பந்தத்தில் செய்து தரவிரும்புவோர் தேர்த்திருப்பணிச் சபைத் தலைவர் திரு. செ. அப்பாத்துரை அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 901


## L. P. GAS

எம்மிடம் பெறலாம்

கட்டுப்பாட்டு விலை.
வீடுகளில் விநியோகிக்கப்படும்.
துரித சேவை;
புதிய பாவனையாளர்களுக்கு சிலிண்டர்கள் கிடைக்கும்
GAS COOKER (3 burner) Rs 875/-
(Imported from Italy)

**டைனமிக் என்ஜினியரிங் லிமிரெட்**

43, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

## I. C. M. A.

மே 1985 பரீட்சைக்கு (சனி, ஞாயிறு போயா நாட்கள்)

| | |
|---|---|
| செக்ஷன் A: | சென்ற வாரம் ஆரம்பம் |
| செக்ஷன் B: | ஆரம்பம்: 8-12-84 |
| STATS and MATHS; | அருள்வரதன் A.C.M.A. |
| L AW. | அரியநாயகம் L. L. B. ATTORNEY at LAW |
| O. P. | வன்னியசிங்கம் M.S. (Econ) |
| PART I: QT மட்டும் | அருள்வரதன் A.C.M.A. |
| PART II சகல பாடங்களும் | முன்னை ஆசிரியர்கள் |

**வைரவர் கடாட்சம்**

பலாலி வீதி, திருநெல்வேலி.

தொலைபேசி: 24424 (895)

## விக்னு

டியூசன் சென்றர், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### 85 A/L மீட்டல் வகுப்புகள்

DAY CLASSES
ஆரம்பம்: 3-12-84 காலை 8 மணி
சனி, ஞாயிறு ஆரம்பம்: 1-12-84 காலை 11 மணி

1. யாழ்நகரில் மீட்டல் வகுப்புகள் மிகச் சிறப்பாக நடைபெறும் கலை வர்த்தகத்திற்கு தனித்துவமான நிறுவனம்.
2. G. A. Q. [குறைந்தது 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு] ஆரம்பமாகின்றது. (889)


## முக்கிய அறிவித்தல்

நகராட்சி மன்றம் – வல்வெட்டித்துறை

### நீர்வரித்திட்டம்

இந்நகராட்சி மன்ற எல்லைக்குள்ளுள்ள 1-ம், 2-ம், 3-ம், 4-ம் வட்டார வரியிறுப்பாளர்களும் 6 ம், 7-ம் வட்டாரங்களில், பருத்தித்துறை, காங்கேசன்துறை வீதியிலிருந்து தெற்கே 100 யாருக்குள் வதிபவர்களும் மேற்கண்ட திட்டத்தால் பயனடைவதால் 12 வீதமான நீர்வரி விதிப்பு அத்தியாவசியமாகின்றது.

வல்வை நீர்த்திட்டத்தைச் சபை பொறுப்பேற்றுல் தான் மக்களுக்கு நற்சேவை புரிய முடியுமென்று அனுபவ ரீதியாக உணர முடிகின்றது. ஒவ்வோர் சேவைக்கும் உரிய வருமானம் பெற்றே செலவு செய்ய வேண்டியுள்ளது. நீர்த்திட்ட முகாமையாளரின் அறிக்கைப்படி மாதவீதம் பராமரிப்புச்செலவு ரூபா 6615/-உம் தேவையான மற்றும் உபகரணங்கள் ஆகிய வற்றுக்கு 1000/- ரூபாவும் செலவாகுமென கணிக்கப்பட்டுள்ளதால் மேற்கொண்டுள்ள 12 வீத வரி குறித்த வட்டாரங்களுக்கும் 6-ம், 7-ம் வட்டாரப் பகுதிகளுக்கும் விசேட வரியாக 1985-ம் ஆண்டிலிருந்து விதிக்கப்படுமென்பதை வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

எதிர்சொல்பவர்கள் 30-11-1984-ந் திகதிக்கு முன்னர் அறியத்தரவும்.

க. சுப்பிரமணியம்,
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
14-11-1984. (902)

## பொதுமக்களின் இனியநண்பர்



தொழிற்சங்கவாதி திரு. க. செல்லத்துரை எம்மைவிட்டு மறைந்து 4 (நான்கு) ஆண்டுகள் மறைந்துவிட்டன. தொழிற்சங்க பிரச்சனைகளை அணுகு முறையில் சிறந்த அனுபவமுடையவர். முதிர்ந்த தொழிற்சங்கவாதி, உறுப்பினர்களின் உரிமையைப்பெற பல போராட்டங்களில் முகம் கொடுத்தவர். 1980ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொது வேலைநிறுத்தம் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக அமைய ஈடுபாடு உடையவர். செயல் ஆற்றல் உள்ளவர். இந்த வேலை நிறுத்தக் காலகட்டத்திலவே அவர் எம்மைவிட்டு பிரியவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

யாழ். அரசாங்க செயலகத்தில் சிரித்த முகத்துடன் சுற்றித் திரியும் தலைவர் திரு.க. செல்லத்துரை இன்றும் எம் முன்னுல் இல்லை ஆனல்அவர் நினைவு எம்மைவிட்டு அழிய வில்லை.

பணி மனைகளில் வசிக்கும் உயர் பதவிகளைக் கொண்டோ பட்டங்களைக் கொண்டோ ஒருவர் கணிக்கப்படுவதில்லை. எந்த மட்டத்தில் இருந்தாலும் உதவி சேவை செய்யும் மனப்பான்மை இருக்கும் ஒருவர்தான் எல்லார் மனதிலும் வாழ்ந்து கொண்டிருப்பார் என்பதற்கு தலைவர் செல்லத்துரை ஒருவர் எடுத்துக்காட்டு. யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் செல்லும் சாதாரண பொது மக்களின் இனிய நண்பர்.

மத்திய செயற்குழு உறுப்பினராகவும், அமரர் செல்லத்துரை அ.பொ தொ சங்கம் யாழ். கிளையின் 21 வருடங்கள் தலைவராகவும். யாழ் கச்சேரி நலன்புரிச் சங்க நீண்டகால செயற்குழு உறுப்பினராகவும் செயலக ஊழியர் ஐக்கிய நாணய சங்கத்தின் உபதலைவராகவும் பணியாற்றினர்.

எனவே நங்கள் அவருக்கு செய்ய வேண்டிய கடமை அவர்விட்டுச் சென்ற அரும் பணிகளைத் தொடர்ந்து செய்யவே அவரின் ஆத்மா சாந்தியடையும். இதை 29-11.84 மறைந்து நான்கு ஆண்டு நினைவு நாளாக இச் செய்தியை தொழிற்சங்க வாதிகளுக்கும் சேவைநலம் படுத்த சகலருக்கும் நினைவூட்டுகின்றும்.

சி. ஆறுமுகம்
(யாழ். கிளை. தலைவரும், மத்திய செயற்குழு உறுப்பினரும்)

## சுழிபுரப்பகுதி திடீர் திடீரென இருளில்

(சுழிபுரம்)

சுழிபுரம் பகுதியில் இரவு வேளையில் திடீர் திடீரென மின்சாரம் தடைப்படுகிறது இதனால் மின் பாவனையாளர்கள் பலத்த கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

மின் வெளிச்சம் தடைப்படக் காரணம் எதுவுமே இல்லை என்று மின்சாரப் பொறியியலாளர்கள் கையை விரிக்கின்றனர். இதன் மர்மம் யாது என்பதை அறிய அதிகாரிகள் முயன்றுவருகின்றனர்.


## QUICKS ENTERPRISES

### Travels & Tours

533, Stanley Road, Jaffna.

கிளை: SARASWATHY GARDENS
Church Road,
Chavakachcheri.
T. Phone: 273



### உங்களுக்கோர் அரியசந்தர்ப்பம்!

**BERLIN** செல்ல விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

11, 13, 18-ம் திகதிகளில் பயணம் செய்வோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொண்டு உங்கள் ஆசனங்களை மலிவுக் கட்டணத்தில் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்தே சகல பிரயாண வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

மற்றும்

INDIAN VISA, PASSPORT-RENEWAL, ALTERATION,

ஆகியன செய்து கொடுக்கப்படும்.


## மரண அறிவித்தல்

### செல்லையா இரகுநாதன்

சுதுமலையை சேர்ந்த செல்லையா இரகுநாதன் (பொறியியலாளர், லிபியா) காலமாகிவிட்டார் இவர் சிறிதனியாவின் கணவரும், ராதன், ரிசன் இவர்களின் அன்புத்தந்தையும் அமரர் வ. க. சம்பந்தன் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் மருமகனும் ஆவர் அன்னரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

(904)

# எம்.ஜி.ஆரின் வேட்புமனுவை நிராகரிக்க நியாயமில்லை!

## அவரைஎதிர்த்துப்போட்டியிடுபவரின் கோரிக்கைநிராகரிப்பு

[சென்னை]

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரனின் வேட்பு மனுவை நிராகரிக்கக் கோரி விடுக்கப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

மதுரை மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டித் தொகுதியில் திரு. ராமச்சந்திரனின் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நியூயோர்க்கில் சிகிச்சை பெற்றுவரும் திரு. ராமச்சந்திரனின் வேட்புமனு அங்கு தயாரிக்கப்பட்டு எடுத்துவரப்பட்டது தெரிந்ததே.

நேற்றுமுன்தினம் வேட்பு மனுக்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோது அவரை எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளரான திரு. வல்லரசு ஆட்சேபம் ஒன்றைக் கிளப்பினர்.

வேட்பு மனுவில் திரு. ராமச்சந்திரனின் இடதுகை கட்டை விரல் ரேகைகள் பதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த ரேகைகளுக்கு ஆதாரம் எதுவும் இல்லையென்றும் அவர் ஆட்சேபம் தெரிவித்தார்.

வேட்பு மனுவில் அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதுவர் முன்னிலையிலேயே திரு. ராமச்சந்திரன் கை ஒப்பம் பெறப்பட்டுள்ளதால் அதற்கு ஆதாரம் எதுவும்பெற வேண்டிய அவசியமில்லைஎன்று தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

---

எகிப்தில் தொழில்புரியும்

# இலங்கையருக்கு புதிய நிபந்தனை

(கெய்ரோ)

எகிப்தில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு வழங்கப்படுகின்ற மாதாந்தச்சம்பளத்தில் சரிபாதி அங்கு செலவிடப்படவேண்டும் என்ற நிபந்தனை ஒன்று அண்மையில் விதிக்கப்பட்டுள்ளதாம்.

இதன் காரணமாக அங்கு பணிபுரியும் இலங்கையர்கள் தமது குடும்பத்தவர்களுக்குக் கூடுதலானபணத்தை அனுப்ப முடியாதநிலை ஏற்பட்டுள்ளது எனத்தெரியவந்துள்ளது.

எகிப்தில் கூடுதலான இலங்கைப் பெண்கள் வீட்டுப்பணிப் பெண்களாகப் பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்புதிய நிபந்தனை எம்மவர்ளுக்குப்பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது எனவும் நம்பப்படுகிறது.

---

# எம். ஜி. ஆர். விரைவில் பேசுவார், நடப்பார்!

## அமெரிக்க டாக்டர் நம்பிக்கை

(சென்னை)

தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் விரைவில் பேசுவார் என்று அவருக்கு நியூயோர்க்கில் சிகிச்சையளிக்கும் டாக்டர் பிரட்மன், இந்திய ஆங்கில தினசரிப் பத்திரிகைநிருபர் ஒருவருக்கு தொலைபேசியில் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

டாக்டர் பிரட்மன் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''எம். ஜி ராமச்சந்திரனுக்கு ஏற்பட்டுள்ள நோய் மிகவும் பாரதூரமானது இதுபோன்ற நோய் உள்ளவர்களால் பேசமுடியாது; நடக்க முடியாது. ஆனல் எம். ஜி ராமச்சந்திரன் விரைவில் பேசுவார் என்று நம்புகிறோம். பாதிக்கப்பட்ட நோயாளருக்கு ஏதாவதுஒரு சக்திஏற்பட்டாலும், பேசுவதற்கும், நடப்பதற்கும் குறைந்தது ஆறுமாதம் செல்லும், ஆனல் எம். ஜி. ராமச்சந்திரன் விரைவில் பேசலாம் தற்போது அவர், சைகைமூலம்தான் எங்களுடன் தொடர்புகொள்கிறார். சைகைமூலம் வணக்கம் செலுத்துகிறார். (இ)

---

## இந்திராவுக்கு அஞ்சலி செலுத்திய தமிழ் இளைஞர்கள்

(பாரிஸ்)

பிரான்சில் வாழும் தமிழ் இளைஞர்கள் மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் நினைவு அஞ்சலிக் கூட்டம் ஒன்றினை பாரிஸ் மாநகரில் அண்மையில் நடத்தினர்.

அஞ்சலிக் கூட்டத்தில் பல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் உரை நிகழ்த்தினர்.

---

## மருந்து கலவையாளர் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்துக் கலவையாளர் [டிஸ்ப்பென்சர்கள்] சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் 14வது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 2ம் திகதி யாழ். நகரிலுள்ள 'பொன்ட்' கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. கிளையின் தலைவர் திரு. சி. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் மருந்துகலவையாளருக்கு விதிக்கப்பட்டுள்ள சிங்களமொழித்தேர்ச்சி நிபந்தனையை நீக்குவது உட்பட பலமுக்கிய தீர்மானங்கள் சமர்ப்பிக்கப் படவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை சங்கச் செயலாளர் திரு என் எம். கந்தசாமி மேற்கொண்டுள்ளார்.

---

# —இந்தியத் தேர்தல் -84—

## வேட்பு மனுக்கள் எல்லாம் நிராகரிப்பு

○ புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள ஒரேயொரு லோகசபைத் தொகுதிக்கு வேட்புமனுவைத் தாக்கல் செய்த 21 பேரின் மனுக்களும் நிராகரிக்கப்பட்டு விட்டன.

இதனல் இத் தொகுதியில் வேருெரு தினத்தில் தேர்தலை நடத்தவேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## போட்டியிலிருந்து திடீர் விலகல்

○ தஞ்சாவூர்த் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல்செய்திருந்த திரு. கே ஐயாறு வாண்டேகர் தனது வேட்புமனுவைதிரும்பப்பெற்றுக்கொண்டார்.

ஏற்கனவே இந்திராகாங்கிரஸ் சார்பில் இந்தத் தொகுதியில் இவர் எம். பி,யாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமிதாப்பச்சனை எதிர்த்து பஹுகுணு

○ இந்தியாவின் முன்னணித் திரைப்பட நடிகர் அமிதாப்பச்சனை எதிர்த்து இந்தியாவின் முன்னணி எதிர்க்கட்சித்தலைவர்களில்ஒருவரான திரு. பஹுகுணு போட்டியிடுகிறார். திரு. அமிதாப்பச்சன் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவது தெரிந்ததே.

## சரண்சிங் ஒன்றில் அவுட்

○ இந்தியாவின் மூத்த தலைவர்களில் ஒருவரும் உழவர் தொழிலாளர் கட்சியின் தலைவரும் முன்னள் பிரதமருமான திரு சரண்சிங்கின் வேட்புமனுவில் ஒன்று நிராகரிக்கப்பட்டுவிட்டது. இவர் தனது வயதைக் குறிப்பிடத் தவறியதாலேயே மனு நிராகரிக்கப்பட்டது இரண்டு தொகுதிகளில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்ததால் இவர் மற்றத் தொகுதியில் போட்டியிடுவார்.

## ஒரு தொகுதியில் 94 பேர் களத்தில்

○ தமிழக சட்டசபையின் மதுராந்தகம் தொகுதியில் ஆகக் கூடுதலாக 94 பேர் போட்டியிடுகின்றனர் தமிழகத்தில் தேர்தலுக்கு 27 சின்னங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருப்பதால் மேலும் சின்னங்களை ஒதுக்குமாறு தமிழக தேர்தல் அதிகாரி இந்திய தேர்தல் கமிஷனருக்கு கோரிக்கைவிடுத்துள்ளார்.

---


# வெளிநாடு செல்வதற்கு

★ விமான டிக்கட்:

விசேட கட்டணத்தில் லண்டன், பரீஸ், சிங்கப்பூர், மலேசியா

SPECIAL FARE TO LONDON, PARIS, SINGAPORE AND MALAYSIA

Attractive fares to European Countries U. S. A., Canada and Australia.

★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை

வார நாட்களில் காலை 8 30 முதல் 4 30 வரையும். சனிக்கிழமைகளில் காலை 9-00 முதல் நண்பகல் 12-00 வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30 ON WEEK DAYS AND ON SATURDAYS BETWEEN 9-00 A M — 12-00 NOON

★ விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

# மக்கினேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

த. பெ. எண்: 92 போன்: 24154



## உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

# லங்கா சீமெந்து

# LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

# 'லங்கா சீமெந்து லிமிட்டட்'

# LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது

'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,

லங்கா சீமெந்து லிமிட்டட்

கீரிமலை ரோட்,

காங்கேசன்துறை.

போன்: 22605



### மணி வாக்கு

உடலைச் சொகுசுக்கும் சோம்பலுக்கும் இரையாக்கி வைத்திருப்பவன் மனிதாபிமானத்தை மறந்தவன்.

— 'தோரோ'

## நமது நோக்கு

# ஆயுதக்குறைப்பு மாநாடு: நிர்ப்பந்தமும் இதயசுத்தியும்

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் தடைப்பட்டுப்போன கேந்திர ஆயுதக் குறைப்பு பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் முயற்சி எடுத்துவருவது ஒருவகையில் மகிழ்ச்சியளித்தபோதிலும், முன்போலவே இதுவும் வெறும் இழுத்தடிப்பாகவும் பிரசாரத் தந்திரமாகவும் நீடிக்கப்போகின்றதா என்ற கேள்வி இயற்கையாகவே எழுகின்றது.

சுமார் 20 வருடங்களுக்கு மேலாகவே வல்லரசு நாடுகள் ஆயுதக் கட்டுப்பாடு பற்றி பேசியும், ஒப்பந்தங்கள் செய்தும், உறுதிகள் அளித்தும் வருகின்றன. அதேசமயம் அவைகளின் அணு ஆயுத உற்பத்தி குறைக்கப்பட்டதாக தெரியவில்லை. ஆரம்பகாலத்தில் இருந்ததைவிட அணுஆயுதங்களின் எண்ணிக்கையும் சக்தியும் அதிகரித்திருப்பதுடன் குறி தவருமலும் மிகக் குறைந்தகால பிரமாணத்திலும் இலக்குகளைத் தாக்கும் அளவுக்கு அபிவிருத்தியடைந்துள்ளன.

1965ம் ஆண்டில் அமெரிக்காவிடம் 1700 கேந்திர ஆயுதங்களும், சோவியத் யூனியனிடம் 340 கேந்திர அணுஆயுதங்களும் இருந்ததாகக் கூறும் விஷயம் அறிந்த நிபுணர்கள், 1984ம் ஆண்டில் அமெரிக்காவிடம் 11,030 கேந்திர ஆயுதங்களும் சோவியத்யூனியனிடம் 9710 கேந்திர ஆயுதங்களும் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். [இவை அமெரிக்கத் தகவல்கள்- சோவியத் ஒன்றியத்தின் கேந்திர ஆயுதங்களின் உண்மையான விபரம் தெரியவில்லை]

நிலைமை இவ்வாறு இருக்கும்போது, இதுவரைகாலமும் இந்த வல்லரசுகளும், இவைகளின் தலைவர்களும் நடத்திய பேச்சுக்களினுலும், செய்துகொண்ட ஒப்பந்தங்களினுலும் உலகுக்கு ஏதாகிலும் நம்பிக்கையளிக்கும் பெறுபேறு கிடைத்துள்ளதா என்று கேட்கத் தோன்றும்.

1974ல் செய்துகொள்ளப்பட்ட கேந்திர ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கை அடுத்தவருடம் முடிவடைகிறது. அதன் பிறகு நிலைமை இன்னும் மோசமாகலாம் என்று கருதப்படுவதால் மீண்டும் ஆயுதக் குறைப்புக்கான ஜெனிவா மகாநாடு ஆரம்பமாகி உருப்படியான ஒப்பந்தங்கள் ஏதும் ஏற்பட வேண்டும் என உலகம் கருதுகின்றது.

ஐரோப்பாவில் அணு ஆயுத ஏவுகணைத்தளங்களை அமெரிக்கா ஏற்படுத்தி வந்ததை கைவிட மறுத்ததையடுத்து கடந்த வருடம் ஜெனிவா மகாநாட்டிலிருந்து சோவியத்யூனியன் வெளிநடப்புச்செய்தது. ஆனல் இப்பொழுது அந்த நிபந்தனையை வற்புறுத்தாமலே மீண்டும் பேச்சுக்களில் சோவித் ஒன்றியம் கலந்துகொள்ளக் கூடிய சாத்தியமிருப்பதாக கருதப்படுகின்றது.

ஏற்கனவே சோவியத் ஒன்றிய வெளிநாட்டமைச்சர் அந்ரே அந்ரேயேவிச் குரோமிக்கோ அமெரிக்க குடியரசுத் தலைவர் றெனுல்ட் றீகனை சந்தித்து பேசியிருக்கிறுர். அடுத்து ஜனவரி 7ம், 8ம் திகதிகளில் திரு. குரோமிக்கோவும், அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ட்ஸும் ஜெனீவாவில் சந்திக்கவிருக்கிறுர்கள். இதையடுத்து மீண்டும் கேந்திர ஆயுதக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கான முழு அளவு மகாநாடு ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்க வேண்டும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை; தேர்தலின் முன் திரு. றீகன் ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக மக்கள் முன் வைத்த சில வாக்குறுதிகளை நிறைவேற்றியாக வேண்டியிருப்பதாலும்; ஆயுதக் குறைப்புப் பேச்சுக்கள் ஆரம்பமாகவேண்டும் என்பதில் அதன் ஐரோப்பிய நேச நாடுகள் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாலும்; இதில் றீகன் பின்வாங்குவாராஞல் வட அத்திலாந்து ஒப்பந்த (நேட்டோ) நாடுகளுக்கிடையில் பிளவு ஏற்படலாமென்ற அச்சம் நிலவுவதினுலும்; அமெரிக்க காங்கிரஸ் சபையின் நெருக்குதல் அதிகரித்து வருவதனுலும்; ஜெனீவாவில் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகி ஒரு நல்ல உடன்பாடு காணப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மாஸ்கோ சென்று அதிபர் கொன்ஸ்டன்டின் செர்னன்கோவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ள பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் நீல் கின்ெனக்ஸ், அமெரிக்காவுடன் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்வதில் அதிபர் செர்னன்கோ இதயசுத்தியுடன் இருக்கிறுர் என்று கருத்து வெளியிட்டுள்ளார். தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்து பிரிட்டனிலுள்ள அமெரிக்க அணுஆயுத ஏவுகணைகளை அப்புறப்படுத்துமாஞல், பிரிட்டனை நோக்கி சோவியத்தில் வைக்கப்பட்டுள்ள அணு ஏவுகணைகள் அனைத்தையும் அப்புறப்படுத்தத் தயாராய் இருப்பதாகவும் அதிபர் செர்னன்கோ தெரிவித்திருப்பதாகக் கின்ெனக்ஸ் தெரிவித்துள்ளார். இந்தப் பேச்சுக்களின்போது ஐரோப்பாவில் அமெரிக்கா வைத்துள்ள அணு ஏவுகணைகளை அப்புறப்படுத்திஞல் தான் ஜெனீவாப் பேச்சுக்களில் கலந்துகொள்ளமுடியும் என்ற சோவியத்தின் பழைய நிபந்தனைபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றும் கூறப்படுகின்றது.

எல்லாவகையிலும் கேந்திர ஆயுதக் குறைப்புப் பேச்சுக்கள் சுமுகமாக ஆரம்பமாகும் சூழ்நிலை உருவாகியிருப்பதாகவே தெரிகின்றது.

1945ம் ஆண்டு ஹிரோஷிமா, நாகசாக்கி நகரங்களில் விழுந்த அணுகுண்டுகளின் நாசவிளைவுகளை நேரடியாகப் பார்த்தும், அறிந்தும், அத்தாக்கத்திலிருந்து இன்றும் விடுபடாமல் இருந்துவரும் உலக அமைதி விரும்பிகள் அந்த ஆயுதங்கள் முற்ருகவே ஒழிக்கப்பட்டுவிட வேண்டுமென்றே விரும்புவார்கள். அதற்கு அடியெடுத்துக் கொடுக்கும் வகையில் மீண்டும் இந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாகுமென்று எதிர்பார்க்கலாமா?

★ ஆட்சிபலம் + பணபலம் + புகழ் =

# அ. தி. மு. கழகத்துக்கு ஜெயலலி

# ஆர். எம். வீரப்ப

# நெடுஞ்செழியன

தமிழக முதல்வரின் உடல் நிலை குறித்து வெளியாகும் மருத்துவ அறிக்கைகள் நம்பிக்கையூட்டிஞலும் அவர் முன்புபோல் தன்பொறுப்புக்களை ஏற்க குறைந்த பட்சம் சில மாதங்கள் ஆகும் என்பது மருத்துவ நிபுணர்களின் கருத்து. ஆகவே தற்போதைக்கு அ. தி. மு. க.வின் தலைமையை ஏற்று அமைச்சரவையையும் கட்சியையும் நடத்திச் செல்லக் கூடிய ஒரு தலைவர் இப்போது ஆளுங் கட்சிக்கு மிக அவசியம்.

அறிஞர் அண்ணு முதல்வராக இருந்த காலத்திலிருந்தே இது போன்ற சமயங்களில் தற்காலிகத் தலைமை ஏற்கக்கூடிய பொறுப்பு, நாவலர் நெடுஞ்செழியனிடம் ஒப்படைக்கப் படும். அதுதான் இம்முறையும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

நாவலர் திரு. நெடுஞ்செழியனைத் தலைவராக ஏற்று அவருடைய கட்டளைப்படி நடக்க கட்சியினர் தயாராகவில்லை. இதற்கு காரணம் நாவலரின் நல்ல குணங்கள், தனக்கென்று ஒரு கோஷ்டியை உருவாக்கிக்கொள்ளத் தெரியாதவர். 'தானுண்டு தன் வேலையுண்டு' என்றிருக்கும் அது கட்சியிலுள்ள எந்தவித அமைப்பையும் தனக்காதரவாக வைத்துக்கொள்ளாதவர்.

இதனுல், நாவலரைத் தலைவராக கட்சியிலுள்ள ஒரு கோஷ்டி மட்டும்தான் ஏற்றுக்கொண்டுள்ளது. இதனுல் எம். ஜி. ஆர் என்கிற தலைவருக்காக இத்தனை நாள் பயந்து ஒளிந்துகொண்டிருந்த கட்சியின் உட்பூசல்கள், கோஷ்டிச் சண்டைகள் வெளியே தலைகாட்டத்தொடங்கியுள்ளன

திரு ஆர். எம். வீரப்பன் எப்பொழுதுமே முதல்வருக்கு மிகவும் நெருக்கமானவர் அவ நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்பதை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டிருப்பார். அவர் வெளிப்படையாக நாவலரை ஆதரிப்பதாகக் காட்டிக்கொண்டாலும் உள்ளுக்குள் அவரை எதிர்த்துக் கொண்டுதானிருக்கிறுர். செல்வி ஜெயலலிதாவின் அரசியல் பிரவேசத்திற்கு ஆரம்பத்திலிருந்தே மறைமுகமாக கறுப்புக்கொடியைக் காட்டி வருபவர் ஆர். எம். வீரப்பன். நேருக்கு நேர் சண்டைபோட்டுக்கொள்ளாவிட்டாலும் இருவரும் கீரியும் பாம்பும் என்பது கட்சியிலுள்ள அடிமட்டத் தொண்டன்வரை தெரிந்த விஷயம் சமீபத்தில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜெயலலிதா பற்றி ஆர். எம். வீரப்பன் தன் எதிர்ப்பை நேரடிகவே தெரிவித்தாராம்.

''இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டு ஜெயலலிதா தனக்கு விளம்பரம் தேடிக்கப் பார்ப்பாங்க இதை யாரும் அனுமதிக்கக்கூடாது. அந்தம்மாவை 'என்கரேஜ்' பண்ணக்கூடாது'' என்று வெளிப்படையாகச் சொன்னதாகத் தெரிகிறது. ஆர். எம். வீரப்பன் தங்களுக்குத் துணையாக இருப்பார் என்கிற தைரியத்தில் ஜெயலலிதாவை எதிர்ப்பவர்கள் அவருடைய அணியில் சேர்ந்துகொண்டார்கள் இந்தச் சமயத்தில் எதையாவது காரணம்காட்டி ஜெயலலிதாவை கட்சியைவிட்டு நீக்கவேண்டுமென்பதில் ஆர். எம். வீரப்பன் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் தீவிரமாக இருக்கிறுர்கள்.

அமைச்சர்கள் கூட்டத்தில் ஆர். எம். வீரப்பனின் கருத்துக்கு முதலில் மறுப்புத் தெரிவித்தவர் அமைச்சர் திருநாவுக்கரசு,

''தேர்தல் வருகிற இந்த நேரத்தில் பொதுக்கூட்டம் நடத்தும்போது கூட்டத்தை ஈர்க்கக்கூடிய நபர்தான் கட்சிக்குத்தேவை. தி. மு. க. தலைவர் கருணநிதிக்குச் சமமாக கூட்டம் சேர்க்கக்கூடியவர் ஜெயலலிதா மட்டுமே'' என்ருர் இதனுல் திருநாவுக்கரசு ஜெயலலிதா கோஷ்டி என்பது தீர்மானமாயிற்று.

ஆர் எம். வீரப்பனின் கோஷ்டியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் 'புரட்சித்தலைவர் தான் எப்பொழுதும் தமிழகத்தின் முதல்வர்.' அவர் உடல்நலம் குன்றியிருக்கும் இச்சமயத்தில் கட்சியைக் கட்டிக்காக்கவேண்டிய பொறுப்பு அண்ணன் ஆர். எம். வீரப்பனேயேசேர்ந்தது வேறு யாரையும் நாங்கள் தலைவராக ஏற்கத் தயராக இல்லை தலைவர் குணமடைந்துவரும்வரை கட்சியைக் கட்டிக்காத்து அவரிடம் ஒப்படைப்போம்' என்ருர் ஆவேசமாக!

முதல்வரைத் தவிர்த்து இருபத்திநாலு பேர் கொண்ட தமிழக அமைச்சரவையில் பணபலமும், ஆட்பலமும் புகழும் கொண்ட அமைச்சர்கள் பதினெருபேர். இந்த பதினெருபேரின் பலத்தைப் பொறுத்துத்தான் மற்ற அமைச்சர்களின் நிலை. இதில் ஆர். எம் வீரப்பன், முத்துசாமி, குழந்தைவேலு இவர்கள அனைவரும் ஓர் அணியில் திரண்டுவிட்டார்கள. இன்னெரு அணியில் நாவலர், திருநாவுக்கரசு, பண்ருட்டி அரங்கநயகம்ஆகியோர். இதில் எந்த வம்பிலும் சிக்காத நல்ல பிள்ளையாக இருப்பவர்கள் ஹண்டே, காளிமுத்து, கே. ஐ. கிருஷ்ணசாமிதான் 'முதலில் நாவலரை ஏகமனதாக வரவேற்பதாக காட்டிக் கொண்ட ஆர். எம் வீரப்பன் கோஷ்டிக் கட்சிக்கு; 'கூட்டம் சேர்க்கவேண்டாமா? ஜெயலிதாவை ஒதுக்கச் சொன்ஞல் எப்படி?'' என்று நாவலர் சொன்னதால் அதையே காரணையாகக் காட்டி ஆர். எம். வீரப்பன் எதிர்க்கே விட்டார் முசிறி லுள்ள கட்சியின் இப்போ பன் சே இன்னெ அமைப் ஞர் அ ஜெயல அமைச் டம்

இப்போ தனக்கு கப்படை ந்த ஜெ லா'வி பிரதாப் ஜப்பான்

## வெள்ளிச் சிந்தனை

### அபரக்கிரியைகள்

பூம்பாவையின் எலும் பைப் பெண்ணுக்கியது திருஞானசம்பந்தநாயனுர் செய்த அற்புதங்களுள் ஒன்று. பூம்பாவை இறந்தபின் அவளின் எலும்பு சேமிக்கப்பட்டிருந்த பாத்திரம் திருஞானசம்பந்தர் முன்வைக்கப்பட்ட போது அந்த எலும்பையே பூம்பாவாய்! என்றழைத்து ''மனிதனுகப் பிறந்தவர் சிவனடியார்க்கு உணவூட்டலும் சிவபெருமானது திருவிழாக்களைத் தரிசித்தலும் உண்மையாயின் உயிர் பெற்று வருக'' என்ற கருத்தமைந் தேவாரப் பதிகத்தை பாடியருள பூம்பாவை உயிர் பெற்றெழுந்தார். இந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் பாடும்போது ''இறந்தவர்களுடைய எலும்பு முதலியவற்றை முன்னிட்டுச் செய்யும் கருமங்கள் அவ்வெலும்பு முதலியவற்றை உடையராயிருந்த உயிர்கட்குச் சென்று பொருந்தும் என்பதை வலியுறுத்துவார் போன்று திருஞானசம்பந்தர் எலும்பையே பூம்பாவை என்றழைத்தார்'' என்னும் கருத்தைப் பாடுகின்ருர்.

ஒருவர் இறந்ததும் அவருக்கு ஈமக்கிரியை அந்தியேட்டிக் கிரியை என்பன இயற்றுவோர் பலர் இக் காலத்தில் இக் கிரியைகளில் முழு நம்பிக்கை அற்றவர்களாய் அலட்சியமாகச் செய்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

இக் கிரியைகள் செய்பவர்களின் சிரத்தை ஒழுக்கம் என்பனவற்ருலும் 'இக் கிரிமைகளைச் செய்துவைக்கும்' குருமாரின் தகுதி மந்திர சித்தி முதலியவற்றின்பெமையாலும் இறந்தவரது உயிருக்கு உறுதி செய்வதோடு அக்குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் இறந்தவரின் திருப்திகரமான ஆசீர்வாதத்தால் நன்மையை உண்டுபண்ணும் வலிமை உடையனவே.

ஒருவர் இறந்தபின் செயயப்படும் கிரியைகளில் சில அவ்வுயிரின் பாவங்களைப் போக்கி அவ்வுயிருக்கு நன்மையுண்டுபண்ணுவதாயும் சில ததிரர் என்ற தேவச்சாதியாருக்கு மகிழ்வை உண்பண்ணுதாயியும் இருக்கும்.

சமயதீட்சை பெற்றபின் தெரிந்து செய்த பாபங்களையெல்லாம் போக்கி அவ்வுயிரினை சிவனடி சேரச்செய்யும் கிரியைகள் பல அந்தியேட்டிக் கிரிகையில் இடம் பெறும் இவை முழுமையான பயனை உடனடியாகத்தர அதனைச் செய்து வைக்கும் குருக்களின் தகுதி, அதில் பங்குபற்றும் பொருட்கள், அக்கருமத்துக்கு உரியவரக விருக்கும் உபயகாரர் தகுதி என்பன தகுதியாயிருக்க வேண்டும். பூரண தகுதியாயில்லாதபோது அவரவர் தகுதிக்கேற்ப அச்செயல்கள் பயன்தரும் என்று முடிவு செய்வதன்றி இக்கருமங்கள் வெறும் சம்பிரதாயமான மூடத்தனமான சமூகத்தில் ஒருவித போலிக்கௌரவத்தை மட்டும் உண்டு பண்ணுவன என்று கருதுவது மகா மூடத்தனமான கொள்கையாகும்.

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும்
இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

—திருக்குறள்

-அருளாளன்

## அமைச்சர்கள்
# ...தா ஒரு பிரச்னை!
# ...று?

...கோஷ்டி அவரை ...டியில் சேர்த்து ...
...த்தன் தலைமையி ...ஜி. ஆர். மன்றம் ...பரும்பலம். அவர் ...ஆர். எம். வீரப் ...டியில் இருக்கிறார். ...பலம் வாய்ந்த ...ம். ஜி. ஆர். இளை ...இதன் தலைமை ...பக்கம் நிற்கும் ...திருநாவுக்கரசுவி ...து.
...தய சூழ்நிலையில் ...கியத்துவம் அளிக் ...ல என்பதை உணர் ...லிதா; 'அப்பா ...லைமை மருத்துவர் ...ட்டியுடன் பேசி ...ாக்டர்கள் வரு

ததை தெரிந்து கொண்டு தானே பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்தார்.

பத்திரிகைகளுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் முதல்வரின் உடல் நிலையைப்பற்றி விளக்கவும் அவ்வப்போது முடிவு எடுக்கவும் அமைக்கப் பட்டதுதான் ஐந்து அமைச்சர்கள் கொண்ட குழு. ஆனால் ஜப்பான் டாக்டர்களின் வருகையை பத்திரிகைகளுக்குத் தெரிவித்தவர் ஜெயலலிதா.

இதனால் கோபமடைந்து, 'கடசிக்கட்டுப் பாட்டை மீறியதற்காக ஜெயலலிதா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று ஆர்.எம். வீரப்பன் கோஷ்டியினர் சொன்னார்கள்.

''ஆர். எம். வீரப்பன் ஜெயலலிதா இரண்டு பேருமே சர்வாதிகாரிகள்- கட்சிக்காரரர்களை ஆட்டிப்படைக்கிறவர்கள். நாவலர் தன்னிச்சையாகத் தைரியமாகச் செயல் பட்டால் அவருக்கு நிறைய ஆதரவு இருக்கும். அவரும் இந்த இருவரையும் நாசூக்காக அடக்கி வைக்கலாம். அவர் செய்வார் என்று தோன்றவில்லை'' என்றார் நடுநிலை அமைச்சர் ஒருவர்.

கட்சியில் நடுநிலைமையாக இருக்கிற 'வி. ஐ. பி.க்கள் இரண்டு கோஷ்டிகளையும் இணைக்கும் வேலையில் இறங்கியிருக்கிறார்கள்.

''கட்சியினுடைய தேர்தல் நிதியெல்லாம் இந்த இரண்டு கோஷ்டிகிட்டேயும் தானே இருக்கு அதமுதலில்ல கட்சிக் கிட்ட ஒப்படைச்சிட்டு இவங்க எப்படி வேணுமானாலும் சண்டை போடட்டும்'' என்றார்கள்.

இந்த விஷயத்தில் இன்னும் யலையிடாமல் இருதரப்பு விடதங்களையும் கேட்டுக்கொண்டு அமைதியாக இருப்பவர் நாவலர்.

'அப்பலோ'வில் நிருபர்கள் நாவலரைச் சந்தித்து கட்சியின் உட்பூசல்கள் பற்றிக் கேட்டபோது ''நாங்க ஒன்றாக உட்கார்ந்து பேசித்தான் முடிவெடுப்போம். உங்களை [பத்திரிகை காரங்களை] எங்களுக்குள்ள பூர விடமாட்டோம்'' என்று கூறிநழுவி விட்டார்.

திருநாவுக்கரசின் தலைமையில் செயல்படும் இளைஞர் அணியை ஒன்றும் செய்யமுடியாது என்று ஆர்.எம். வீரப்பன் கோஷ்டியினர் தீர்மானித்துவிட்டார்கள். ஜெயலலிதாவின் அணி இன்னும் பலகாரியங்களில் இறங்கியுள்ளது. சட்டசபை துணைக் கொறடாவான திருப்பூர் மணிமாறன் ஜெயலலிதா அணியைச் சேர்ந்தவர். அவர் முசிறிப்புத்தனின் எம். ஜி. ஆர் மன்றத்தைச்சமாளிக்கும் பணியில் இறங்கியிருக்கிறார்.

பாராளுமன்றத்தில் — இ. கந்தசாமி

# அகதிகளை ஒழிக்க வேண்டும் என்று கர்ஜித்தது ஒருகுரல்!

சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டதன் விளைவாக நாட்டில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட ''வரலாற்று கறைபடிந்த அந்த 83 ஜூலை ''சம்பவங்கள் மீண்டும் இடம்பெருமலிருக்க 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யட்பட்டபோதிலும் பாராளுமன்றத்தில் திட்டமிட்ட 'பட்ஜட்' விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

அண்மைக்காலமாக பலப்படுத்தப்பட்டிருந்த பாராளுமன்ற பாதுகாப்பை மேலும் பலப்படுத்தி விவாதம் தொடர்ந்தது.

### ஊரடங்கிய வேளையில்

24 மணிநேரமும் ஊரடங்கியிருந்தவேளை ஆட்சி மன்றத்தில் பட்ஜட்பற்றிய கருத்துக்களுடன் சாவகச்சேரி சம்பவம், பயங்கரவாதம், இனப்பிரச்னை குறித்தும் அலசி ஆராயப்பட்டது

தமிழர் பிரச்னையை கட்சி ரீதியில் தேசியபிரச்னையாகக் கருதி காலந்தாழ்த்தாது பரிகாரம்காண வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை கோரிக்கைவிடுத்தார், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் செல்லையா இராசதுரை.

பட்ஜட் உரையில் நிதி அமைச்சர் ஜரிஸ் பிரச்னையுடன் தமிழ் மக்களின் விவகாரத்தை ஒப்பிட்டுக் கூறியவற்றை தமதுஉரைக்கு துணையாக்கிக் கொண்ட 'இராசு' எதிர்கால சந்ததியினர் எம்மைக்குறை கூருமல் இருக்கும் வகையில் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண முயலும் ஜனாதிபதியின் கரத்தைவலுப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

''அகதிமுகாம்களில் இருப்பவர்களுக்கு உணவு கொடுப்பதை எமதுமக்கள் விரும்பவில்லை. யுத்த காலத்தைப் போன்று அவர்களைஒழித்துக் கட்டவேண்டும்'' என்று பொல்காவலைச் சிங்கம் சுனில் ரஞ்சன்ஜெயக்கொடி கர்ச்சித்தார்.

''பொல்காவலையிலிருந்து கொழும்புக்குவர எனக்கே பயமாகஇருக்கிறது முன்னாள் எம். பி. நவரத்தினம் சாவகச்சேரியிலிருந்து அங்கு பொலிஸ்நிலையம் தாக்கப்பட்டதினத்தன்று தாடியுடன் சிராவஸ்திக்குவந்து சென்றிருக்கிறார் ''என்றும் அவர் கூறினார்.

(8ம் பக்கம் பார்க்க

இருதய நோய்க்காக 'அப்பலோம்' மருத்துவ மனையில் 247ம் நம்பர் அறையில் தங்கியிருகிறார் முசிறிப் புத்தன். சென்ற வாரம் அவரைச்சந்திக்க இரண்டு, மூன்று முறை சென்றபோதும் மணிமாறன் பேசிக்கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள்.

'எஸ். எடி. எஸ்', கட்சியை விட்டு விலகும் சூழ்நிலையில் கூட ஜெயலலிதாவைப் போன்ற தேர்ந்த அரசியல்வாதியாருமில்லை என்று எல்லாப் பொதுக் கூட்டங்களிலும் சொல்லி வந்த முசிறிப் புத்தன் இப்போது அவருடைய 'மன்றமுரசு' பத்திரிகையில் ஜெயலலிதாவை தாக்கி எழுத ஆரம்பித்து விட்டார்!

நன்றி: ஜூனியர் விகடன்


...ப்ஸ் 30.48 செ.மீ. (12'') கறுப்பு வெள்ளை ... 90° உடனடி ஆரம்ப படக் குழாய்கள் பொருந்தி...வ, VHF/UHF தொனிக்கட்டுப்பாடு, ஆரம்ப/...த்த சுழல்விசை, தொனி,பிரகாசம், பிம்ப பேதம், ...னிணைந்த ஒலிபெருக்கி ஆகிய சிறப்புக்களோடு ...சக்தியிலும் 12V கார்பட்டரியிலும் இயங்கக்கூடி... விலை. ரூ. 2,975/- மட்டுமே. (US$ 85)



பிலிப்ஸ் 35.56 செ.மீ. (14'') கறுப்பு வெள்ளை டிவி 90° உடனடி ஆரம்ப படக்குழாய்கள் பொருந்தியவை, VHF/UHF தொனிக் கட்டுப்பாடு, சரியான படத்தெரிவுக் கேற்றதிரையில் செங்குத்துக் கட்டக் காட்சி. (சேவை வழி தெரிவுசெய்யப்பட்டதும் தானாக மறைந்துவிடும்.)

ஆரம்ப/நிறுத்த சுழல் விசை, தொனி, பிரகாசம், பிம்பபேதம். ஆகிய சிறப்புக்களோடு மின்சக்தி அல்லது 12 V கார் பட்டரியில் இயங்கக்கூடியது. விலை. ரூ 3,850/- மட்டுமே, (US$110)



பிலிப்ஸ் 60,96 செ. மீ. (24'') கறுப்பு வெள்ளை டிவி 110° உடனடி ஆரம்ப படக்குழாய், முன் தெரிவுக்கேற்ற 6 சேவைத் தொடு விசைகள், ஆரம்ப/நிறுத்த சுழல்விசை, தொனி, பிரகாசம், பிம்பபேதம், முன்னிணைந்த பெரிய தரச்சிறப்பான ஒலிபெருக்கி ஆகியசிறப்புகள் கொண்டது. விலை. ரூ 6975/- மட்டுமே, (US$195)



# மிகக் குறைந்தவிலையில்... ...ரமான கறுப்பு வெள்ளை தொலைகாட்சிப் பெட்டிகளை பிலிப்ஸ் வழங்குகிறது.

பிலிப்ஸ் தெரிவு செய்யுங்கள், அது முழுமையாக உஷ்ண வலயத்துக்குப் பொருந்தும். கட்டுப்படியாகும் விலையில் படத்திற்கும் தொனிக்கும் தனிச் சிறப்புக் கொண்ட நீடித்துழைக்கும் டச்சு டி.வி பிலிப்ஸ்.

- சுலபமான கட்டுப்பணத்திட்டம் (1/3 உடனடியாகவும் மீதி 12, 24 அல்லது 36 மாதாந்த கட்டுப்பணம்.)
- 1வருட உத்தரவாதம் (படக்குழாய்களுக்கு 3வருட உத்தரவாதம்)
- மேலதிக விபரங்களுக்கு தி பினான்ஸ் கமபனியை நாடுங்கள்

ஏகபிரதிநிதிகள்.
ஹெய்லீஸ் லிமிட்டெட்
(பாவனையாளர் மின்னியக்கப் பிரிவு)
25, ஃபொஸ்டர் லேன்,
கொழும்பு 10.
தொலைபேசி: 91181-9
(சேவைப்பிரிவு, தொலைபேசி: 597201)
பிலிப்ஸ் காட்சியறைகள், 646 காலிவீதி, கொழும்பு 3.
(தொலைபேசி: 586958)
கடை இல 2 நிலத்தளம், சுங்கத்தீர்வையற்றகடைத் தொகுதி, காலி வீதி, கொழும்பு 3
நாடெங்குமுள்ள பிலிப்ஸ் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

PHILIPS
நீங்கள் சிறந்ததைப் பாவிப்பதே எங்கள் நோக்கம்.

HTL HL 1553

# நாயாறு கொலைவழக்கு: எதிரிகள் பிணையில்

(வவனியா)

முல்லைத்தீவு நாயாறு மீன்வாடி முதலாளியாகிய லூக்கஸ் கொலை வழக்கில் எதிரிகளாகிய டபிள்யூ ஏ. மிரன்டா, ஏ சி. சொய்சா, பிரேமரெட்ன ஆகிய மூவர் சார்பில் செய்யப்பட்ட பிணைமனுக்களை ஏற்றுக் கொண்ட வவனியா மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. ஜி ஆசிர்வாதம் மூவரையும் தலா ஐயாயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த மூன்று எதிரிகளின் சார்பில் முதலாம் எதிரியின் மனைவியும் இரண்டாம் எதிரியின் சகோதரியும் மூன்றும் எதிரியின் தாயுமாகிய சிலாபத்தைச்சேர்ந்த திருமதி. சைமன் மரியதலட்டி என்ற பெண் தாக்கல் செய்த பிணை மனுவில் தமிழில் கைச்சாத்திட்டிருந்தார்.

''இக் கொலைச் சம்பவம் 22-4-84 அன்று நடைபெற்றுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட இறந்தவர் எதிரிகள் அனைவருமே வெளியிடத்தவர்கள். இறந்த லூக்காசும் முதலாம் எதிரியான மிரன்டாவும் நாயாற்றில் உள்ள இரு வேறு வாடிகளின் உரிமையாளர்கள் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக இறந்தவர் தனது வாடி ஊழியர்களுடன் எதிரியின் வாடிக்குப் போய்ச்சச்சரவில்ஈடுபட்டுள்ளார். தற்பாது காப்பின் நிமித்தம் முதலாம் எதிரிமேற்கொண்ட பதில்தாக்தலில் மிரண்டா இறந்துள்ளார். வேறும் இருவர் காயம் அடைந்துள்ளார்கள் சண்டை நடைபெற்ற இடம் எதிரிகட்குச் சொந்தமான மீன்வாடிதான்.

இவ்வாறு எதிரிகள் சார்பில் ஏற்பட்டு வாதாடிய சட்டத்தரணி கனக மனோகரன் தெரிவித்தார். அரச தரப்பில் அரச சட்டத்தரணி திரு. சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா ஆஜராகியிருந்தார்.

## இடமாற்றம்

(சுண்டிக்குழி)

யாழ்.தேர்தல் அலுவலகத்தில் பத்து வருடங்கள் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. எஸ். கந்தசாமி இம்மாதம் 14ம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார். இவரது இடத்திற்கு அவ்வலுவலகத்தில் கடமையாற்றும் திரு. இ நாகேந்திரம் பதில் நியமனம் பெற்றுள்ளார்.

## அஞ்சலி சுவரொட்டி

[பண்டத்தரிப்பு]

பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி தமிழீழ விடுதலை இராணுவம் சுவரொட்டிகளை யாழ் மாவட்டம் எங்கும் ஒட்டியுள்ளது. ஈழத் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் மறைந்து விட்டது என்ற தலைப்பில் அன்னை இந்திரா காந்தியின் படத்துடன்இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன,

## பனம்விதை தென்னை நடுகை

[பச்சிலைப்பள்ளி]

வவனியா மாவட்டத்தில் உள்ள பெரியதம்பனையில் மரம் நடுகை இயக்கத்தின்கீழ் பனம்விதை,தென்னை என்பன நடுகைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரியதம்பனை யாழினி மாதர் அபிவிருத்திச் சங்கம் பனம்விதை, தென்னை ஆகியவற்றினை மக்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளன.

## விவசாயப் போதனாசிரியரின் மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கீரிமலை விவசாயப்போதனாசிரியருக்குச் சொந்தமான கறுப்புநிற 'யமகா' மோட்டார் சைக்கிள் கடந்த பதினைந்தாந் திகதி திருநெல்வேலி விவசாய அலுவலகத்துக்கு முன்பாக இனம்தெரியாத மூன்று இளைஞர்களால் கடத்தி செல்லப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் என்று கருதியே கடத்தப்பட்டுள்ள போதிலும் விவசாய திணைக்களத்தால் விவசாயப் போதனாசிரியருக்கு கடன் அடிப்படையில் வழங்கி தற்போது சொந்தமாக கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவுறுத்தும் தஸ்தாவேஜும் விவசாயப் போதனாசிரியரின் மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான லைசென்ஸ், இன்சூரன்ஸ் என்பவற்றையும் கூடவே அந்த இளைஞர்கள் எடுத்துச் சென்றுவிட்டனராம்

திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலைக்குச் சொந்தமான இதேவகையான மோட்டார்சைக்கிள் கடத்தப்பட்ட மூன்றும்நாள், கீரிமலையில் இருந்து யாழ். உதவி விவசாயப் பணிப்பாளரைச் சந்திக்கச்சென்ற விவசாயப் போதனாசிரியருக்கே இக்கதி நேர்ந்துள்ளது.

## "அந்தக் கொடுமையை அவரால் தாங்கமுடியவில்லை"

(வவனியா)

''தனது உடன்பிறந்த சகோதரியை அவளது கணவன் அடி வெறியில் அடித்துத் துன்புறுத்தியதாக சொல்லக் கேட்டு ஓடிப்போன முதலாம் எதிரி பெருமாள் தன்னை மறந்து முதலாம் எதிரி மேற்கொண்ட தாக்குதல் தான் துரதிஷ்ட வசமாக கொலையில் முடிந்துள்ளது. இரண்டாம் எதிரி கந்தசாமி சம்பவத்தில் சம்பந்தப்படவில்லை.''

இவ்வாறு பெரியதம்பண்ணை நடராசா கொலை வழக்கில் எதிரிகளான இரு சகோதரர்கள் பெருமாள், கந்தசாமி சார்பில் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்சலான பிணை மனுவை ஆதரித்த சட்டத்தரணி கனக.மனோகரன் தெரிவித்தார். மேற்படி பிணை மனுவை 1ம் எதிரி பெருமாளின் மனைவியான சிங்களப் பெண்மணி திருமதி குமாரி திசநாயக்கா பெருமாள் தாக்கல் செய்திருந்தார் இப்பிணை மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி திரு ஜே ஜி. ஆசிர்வாதம் எதிரிகளைத் தலா நாலாயிரம் ரூபாய் பிணையில் விடுவிக்குமாறு வவனியா நீதிமன்றுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். அரசதரப்பில் அரச சட்டத்தரணி திரு சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா ஆஜாராகியிருந்தார்.

## பதவிஉயர்வு

[புலோலி]

யாழ். அபிவிருத்திச்சபை அச்சுவேலி உப-அலுவலகத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு வி. வேலாயுதம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகப் பதவி உயர்த்தப்பட்டு யாழ். அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார்.

## 1,000 வது கிரிக்கெட் டெஸ்ட்

இஸ்லாமாபாத், நவ 28, கடந்த ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானுக்கும் நியூஸிலாந்துக்குமிடையே இடம்பெற்ற 2-வது டெஸ்ட் ஆயிரமாவது கிரிக்கெட் டெஸ்ட் பந்தயமாகும்.

1877ம் ஆண்டு முதலாவது டெஸ்ட்பந்தயம் ஆவுஸ்திரேலியாவின் மெல்போன் மைதானத்தில் ஆரம்பமானது. இதில் பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் பங்கெடுத்தன.

அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டு கிறிக்கெட் ஆட்ட நாடுகள் டெஸ்ட் அந்தஸ்த்துப்பெற்று இதுவரை 1,000 டெஸ்ட்பந்தயங்களை ஆடியுள்ளன. (கி)

## வங்கி ஊழியரின் இலவச கருத்தரங்கு

(புலோலி)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச் சங்கம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க பொ த. (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ் ஆங்கில தட்டெழுத்து, ஆங்கில சுருக்கெழுத்து பாடங்களுக்குத் தோற்றவிருக்கும் மாணவ, மாணவிகளின் நன்மை கருதி இலவசக் கருத்தரங்குகளை நடாத்தவுள்ளது

சாவகச்சேரி டச் வீதியில் உள்ள ஒரு நிறுவனத்தில் இம்மாதம் 27-ம் திகதி பகல் 1மணிக்கும் வல்வெட்டி விநாயக வித்தியாலயத்தில் 28 ம் திகதி பிப 230 மணிக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியிலுள்ள ஒரு நிறுவனத்தில் 29ம் திகதி பகல் 1 மணிக்கும் அடுத்தமாதம் 2ம் திகதி புத்தூர் சோமஸ்கந்தாக்கல் லூரியில் அமைந்துள்ள கல்விமூலவள நிலையத்தில் காலை 9 மணிக்கும் இவ் இலவச கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன

இக்கருத்தரங்கு வகுப்புக்களை வல்வெட்டித்துறை மக்கள் வங்கிஊழியர் நலன்புரிச் சங்க திட்டஅமைப்பாளரும், வங்கிச் சுருக்கெழுத்தாளருமான திரு வயிரவப்பிள்ளை சிவச்சந்திரதேவன் நடாத்துவார்.

## இயக்குநர்சபை நிர்வாகிகள்

(புலோலி)

புலோலி பலநோக்குக்கூட்டுறவுச்சங்க இயக்குநர்சபைத் தலைவராக திரு.கே.வி கதிர்காமு தெரிவுசெய்யப்பட்டுள்ளார் உப-தலைவராக திரு.எஸ் கதிரகாமத்தம்பி தெரிவாகினார்.

இயக்குநர்சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் வே கதிர்காமலிங்கம், எஸ் பூரணச்சந்திரன் எஸ். இராகவானந்தம் எஸ் தாமோதரம், எம். புவனேந்திரன் ஆகியோரும்தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எம். கந்தையாவும் கலந்து கொண்டார்.



**ராணி** (யாழ்ப்பாணம்
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00,
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
மு. கருணாநிதியின்
**பூமாலே**

**வின்ஸர்** (யாழ்)
10-30, 2-00,
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
**சிவப்பு சூரியன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லே**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - லக்ஷ்மி
**ராஜராஜசோழன்**
(கலர்)

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15,
SHARKY'S MACHINE
[Action-Packed Thrill)
**றீகல் மினி**
10-15, 2-00,
தியாகராஜன்-பானுசந்தர்
அர்ச்சனா-பாலுமகேந்திரன்
**நீங்கள் கேட்டவை**

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30,
Brooke Shields
Christopher Atkins
"THE BLUE LAGOON"
கப்பல் விபத்தில் தப்பி ஒரு தீவில் கரைசேர்ந்து வளர்ந்த இரு சிறுர்களின் காதல் காவியம்.
கண்டிப்பாக வயதுவந்தவர்கட்கு மட்டும்.

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-00, P. M.
ஜெய்சங்கர்
**துணிவே துணை**

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30,
2வது கொட்டகை நிரம்பிய வாரமாக யாழ். நகரில் என்றுமே இல்லாதளவு மாதர்கள் பெருந்திரளாக பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும் ஓர் திரைப்படம் தான்
K. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**
[கலர்]
ஏமாற்ற மடையாமல் இன்றே பார்த்துமகிழுங்கள்

# சுவிஸில் தமிழ் இளைஞர் நிலைமை: ஓர் உண்மையான கண்ணோட்டம்

[க. ஜீவகதாஸ்]

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் நிலவுகின்ற ஐக்கியமின்மை, முரண்பாடு, துர் நடத்தைகள் போன்ற செயல்கள் சுவிஸ் மக்கள் மத்தியில் தமிழ் இளைஞர்கள்மீது வெறுப்புணர்வையும், நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக அறைகளையோ, வீடுகளையோ தமிழ் இளைஞர்களுக்கு வாடகைக்குக் கொடுக்க சுவிஸ் மக்கள் முன்வருகிறுர்களில்லையாம்.

சில கட்டங்களில் வாடகைப் பணத்தினையும், முற்பணத்தினையும் பெருந்தொகையாக வழங்கும்படியும் கேட்கப்படுகின்ருர்கள்.

நிரந்தர வேலையில்லாத நிலையில் கூடுதலான பணத்தைக் கொடுத்து அறைகளையோ அல்லது வீடுகளையோ வாடகைக்கு எடுக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் தமிழ் இளைஞர்கள் அங்குள்ளனர்.

தற்போது சுவிஸ் அரசாங்கமும், பொலிசாரும் தமிழ் இளைஞர்கள்மீது மிகவும் கண்காணிப்பாக இருப்பதன் காரணமாக நிரந்தர வதிவிட விசாவின்றி இவர்கள் எங்குமே தற்காலிக வேலைகூடச் செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

அதேசமயம் சுவிற்சர்லாந்திலுள்ள சமய ஸ்தாபனங்களும், மற்றும் பொது இயக்கங்களும் தமிழ் இளைஞர்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கிவருவதுடன் மொழி பயிலும் வகுப்புக்களையும் இலவசமாக நடத்திவருகின்றனவாம்.

சுவிற்சர்லாந்தில் சுமார் 1700 தமிழ் இளைஞர்கள் அரசியல் தஞ்சம் கோரியிருப்பது ஏற்கனவே தெரிந்ததே. இவர்களுக்கான விசாரணைகள் தற்போதும் நடைபெற்றுவருகின்றனவாம்.

## சட்டத்தரணி



அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கதிரிப்பிள்ளை சபாரத்தினம் பிரதம நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தா மற்றும் நீதியரசர்கள் திரு. ரெட்றிகோ, திரு. வண சுந்தர ஆகியோர் முன்னிலையில் புதிய சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டப் பட்டதாரியான இவர், தற்போது யாழ்ப்பாணச் செயலகத்தில் ஆங்கில, சிங்கள மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றுகிருர். இதற்கு முன்னர் தகவல் திணைக்களம், கொழும்பு கச்சேரி ஆகிய அலுவலகங்களில் சேவையாற்றியுள்ளார். பாடசாலைகளுக்கிடையிலேயும், பல்வேறு தாபனங்களினுலும் நடத்தப்பட்ட ஆங்கில, தமிழ் பேச்சு கட்டுரைப் போட்டிகளில் பரிசில்களும், விருதுகளும் பெற்றுள்ள திரு. சபாரத்தினம் பத்திரிகைத் துறையில் ஈடுபாடு கொண்டு விடய தாபனங்களை வழங்கி வருகிருர். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் ஆவரங்காலைச் சேர்ந்த காலஞ் சென்ற சீ. கதிரிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவர்.

## ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டுவளம் [ஆங்கிலம்]
5-35 'பிளாஷ் கோர்டன்' கார்டூன் சித்திரம் [ஆங்கிலம்]
6-00 விளையாட்டுப் பயிற்சி [தமிழ்]
6-15 'பிக் புளூ மாபிள்' சிறுவர் நிகழ்ச்சி [ஆங்கிலம்]
6-40 மருத்துவ அறிக்கை [ஆங்கிலம்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 'மப்பட் ஷோ' [ஆங்கிலம்]
7-45 'ஜப்பானியத் தோட்டங்கள்' விவரணச் சித்திரம் [ஆங்கிலம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 தகவல் நிகழ்ச்சி ஆங்கிலம்]
9-10 'கிரெமி விருதுகள்'-84 [ஆங்கிலம்]
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
9-50 கிரெமி விருதுகள் -84 தொடர்ச்சி [ஆங்கிலம்]
10-30 உலகச் செய்திகள்
10-35 கிரெமி விருதுகள் தொடர்ச்சி
10-50 நிகழ்ச்சிகள் முடிவு.

## "இன்றைய நிலையில் இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி மிக அவசியம்"

### மாவட்ட பயிற்சித்தலைவர் கூறுகிருர்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

'இன்றைய நிலையிலேயே எமது இளைஞர் யுவதிகளுக்குத் தொழிற் பயிற்சிகளை வழங்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிக முக்கியமானதாகும். உலகிலே உள்ள லயன்ஸ் கழகங்களில் இளைஞர்கள் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகளை மேற்கொண்டுவரும் ஒரேயொரு லயன்ஸ் கழகம் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் தான் என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக தொழிற் பயிற்சி நிலையத்தில் 300 இளைஞர்கள், யுவதிகள் தொழிற் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர். பருத்தித்துறை லயன்ஸ் கழகமும் இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சி நிலையமொன்றை அமைக்கவேண்டும். இத் தொழிற் பயிற்சிக்கான உதவிகளை வெளிநாடுகளிலிருந்து பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்'.



லயன் விஜயரத்தினம்

இவ்வாறு பருத்தித்துறை லயன்ஸ் கழக அங்கத்தவர் நிலைநிறுத்தல் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய லயன்ஸ் கழக மாவட்ட (தொழிற் பயிற்சி) தலைவர் லயன் ஈ. விஜயரத்தினம் குறிப்பிட்டார். பருத்தித்துறை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் டாக்டர் முருகானந்தனின் இல்லத்தில் நடைபெற்றது.

லயன் டாக்டர் முருகானந்தன் தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

'உலகிலேயே 157 நாடுகளில் 36,500 லயன்ஸ் கழகங்கள் இயங்கிவருன்றன. இவற்றில் ஒரு கோடியே 50 இலட்சம் பேர் அங்கத்தவர்களாகவிருந்து மக்கள் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றனர். லயன்ஸ் கழகம் உண்மை, அன்பு, சேவை என்ற மூன்றையும் தன் தாரக மந்திரமாகக் கொண்டது. மக்கள் சேவையையே தங்கள் தலையாய கடமை என்ற உணர்வோடு மக்கள் சேவையையே உயர்ந்த இலட்சியம் எனக் கொண்டு செயல்பட்டு வரும் லயன்ஸ் கழகம் கஷ்டப்படுபவர்களுக்கு உதவுகின்ற நற்பணியோடு தங்களைச் சார்ந்த சமூகத்தை மேல் நிலையடையச் செய்வதிலும் முன்னின்று உழைத்து வருகின்றது.

லயன் டாக்டர் எஸ். நாகநாதன், லயன் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம், லயன் பட்டயக் கணக்காளர் ஏ. சோமசுந்தரம்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர். லயன் மெய்கண்டதேவரின் பாரியாரும், லயன் சிவராமலிங்கத்தின் பாரியாரும் பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தின் சார்பில் கால் ஊனமுற்ற அல்வாய் தெற்கைச் சேர்ந்த கு. இராசநாயகம் என்பவருக்கு முச்சக்கர வண்டியொன்றைக் கையளித்தனர்.

## இன்றைய பலன்

மாதம்—கார்த்திகை
திகதி—15 (30-11-1984)
வாரம்—வெள்ளி
திதி—அட்டமி பின் இரவு 5-11வரை
நக்ஷத்திரம்—சதயம் பின் இரவு 2-55வரை

மேடம்-: உண்மை வழி நின்று உயர்வடைவீர்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள் மீது பதியும் சகோதர வழி நன்மையுமுண்டு.

இடபம்:- அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும் படித்தவர்களின் ஆதரவும் அன்னை வழிச்சிறப்புமுண்டு.

மிதுனம்;- இல்லத்திலும் இனிமை தவழும் உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெருகும் புத்திர வழியாலும் புகழ் வந்து சேரும்

கடகம்:- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளலாம் உடல் நலத்தைப் பேணவும்.

சிங்கம்:- குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும் பிரம்மச்சாரிகள் வாழ்கையில் காதல் அரும்பும் நல்ல நாள்.

கன்னி:- நண்பர்களின் தொல்லையாலே நலிவுகள் தென்படும் பண்புகள் பறந்து போகும் பரதேசிக் கோலமாகும்.

துலாம்:- பந்துசனங்களின் கொண்டாட்டத்திற்கும் பெரியோர்களின் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு.

விருச்சிகம்:-பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வு கிடைக்கும் சிலருக்கு புதிதாகவும் தொழில் கிடைக்கும் வெளியிடத் தொடர்புகள் பெருகும்.

தனுசு:- எதிர்பாராத வரவுக்கும் எண்ணிய கருமம் கைகூடவும் இடமுண்டு இன்று அதிர்ஷ்டகரமான தினமாகும்

மகரம்:- எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும் ஏமாற்றம் தாக்கும் விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.

கும்பம்:- குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள் எதிலும் அவசர முடிவை தவிர்த்துக் கொள்ளவும் உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

மீனம்:- புதுவழிகள் மூலம் பணம் கிடைக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை பாரதி இளைஞர் அறிவியற் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மறைந்த அன்னை இந்திராவின் நினைவஞ்சலிக் கூட்டமும், மலர் வெளியீடும் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

செல்வி றெசிற்ரு அலெக்ஸ்சாண்டர் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் திரு. சி. இராஜதுரை, திரு. ஆர். தார்சியஸ், திரு ஏ தேவராசா திரு. ஞா. குணதாஸ், திரு. பெ. மோகன் ஆகியோர் பங்குபற்றுவர். (வி)

கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99 2/5C B கபூர் பிலடிங்
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

## வீடுகளைச்சோதனையிடும் ராணுவத்தினரின் அடையாள அட்டையைப் பரிசீலிக்கவும்

### தலைமைப்பீடம் அறிவுறுத்தல்

[கொழும்பு]

விடுகளைச் சோதனையிட வரும் இராணுவத்தினரிடம் அவர்களது அடையாள அட்டையைக் கேட்டு வாங்கிப் பார்த்தபின்னரே அவர்களை வீட்டினுள் அனுமதியுங்கள் என்று ராணுவத் தலைமைப் பீடம் அறிவுறுத்தியுள்ளது

ராணுவ உடையில் பலரும் இப்போது நடமாடுவதைத் தொடர்ந்தே இவ்வாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளதாகத் தலைமைப்பீட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

## மட்டக்களப்பு தபாலகத்தில் மர்மப் பார்சல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தபால் நிலையத்தில் நேற்றுக் கடதாசியால் சுற்றப்பட்ட பார்சலொன்று காணப்பட்டது.

இதுபற்றி அங்குள்ள ஊழியர் ஒருவர் மேலதிகாரிக்குத் தெரிவித்தார். இந்தப்பார்சலுக்கு ஒருவரும் உரிமை கோரவில்லை.

தபால் நிலைய ஊழியர்கள் வெளியேற்றப்பட்டு' அதிரடிப் பொலிசார் வரவழைக்கப்பட்டனர். இவர்கள் 5தடவைகள் வெடிவைத்துப் பார்சலை சோதனையிட்டனர். பார்சலுக்குள் மட்டக்களப்பு கச்சேரி பதிவாளர் அலுவலகத்திற்குரிய கடிதங்கள் கட்டுக்கட்டாக காணப்பட்டன. அந்தக் கடிதங்களை உடைத்துப் பார்த்தபோது அதற்குள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் காணப்பட்டன. இப்பத்திரங்களை அதிரடிப் பொலிசார் எடுத்துச்சென்றனர்.

மட்டக்களப்பு தபால் நிலைய அதிபர் திரு. பி. தங்கராசா இதுகுறித்து அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்

---

## பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 85-ம் ஆண்டு சேர்வதற்குப் பதிவுசெய்துகொண்ட மாணவர்கள் (அண்மையில் வெளிவந்த ஜி சி ஈ. உயர்தரப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகள் பெற்றவர்கள் மட்டும்) இன்று 30-ம் திகதி யாழ். பல்கலைக்கழகப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதிக புள்ளிகள் பெற்றவர்கள் பொறியியல் பீடம், மருத்துவபீடம் ஆகியவற்றுக்குச் சேர்வதற்கு விரும்புபவர்களுக்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் இவர்கள் முன்னர் செய்துகொண்ட பதிவு வாபஸ் பெறப்படும் என்றும் அவர் சொன்னார். (மா)

---

## தாமதித்து வந்த யாழ். தேவி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்று அதிகாலை புறப்பட்ட யாழ் தேவி தாமதித்து பிற்பகல் 3-00 மணியளவில் யாழ் ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

யாழ் தேவி பிற்பகல் 4-30 மணியளவில் கொழும்பு திரும்பியது.

---

## சீனிக் கப்பல் கொழும்பு திரும்பியது

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறைமுகத்திற்கு வந்த சீனிக்கப்பலில் 3 குண்டுகள் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, கப்பலுக்குப் பாதுகாப்பு இல்லையென்ற காரணத்தினால் மீதியான சீனி மூடைகளுடன் நேற்றுமுன் தினம் மாலை 5 மணிக்கு கொழும்பு திரும்பியது.

இக்கப்பல் இம்மாதம் 23-ம் திகதி காங்கேசன்துறைக்கு வந்தது 'பசுபிக்றிவர்' என்ற இக் கப்பலில் 3 குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. கண்டுபிடித்த இக்குண்டுகளை ஆயுதப்படையினர் வந்து கொண்டு சென்றனர்.

17,956 சீனி மூடைகள் இறக்கப்பட்டுவிட்டன. மிகுதியான 1044 மூடை சீனியுடன் கப்பல் திரும்பியது. [க-பா]

---

## அகதிகளை. .

(5ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

''பட்ஜட்டுக்குமுன் அடுத்தனர் நவீனஆயுதங்களை வெளிநாடுகளிலிருந்து தருவித்து சிங்கள இளைஞர்களுக்கு பயிற்சியளித்து பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டவேண்டும். ''என்றும் கோரிக்கைவிடுத்தார்

### அனுரா ஆவேசம்

''சாவகச்சேரி சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் 2 மணித்தியாலத்தில் இந்தியாவுக்குச் சென்றிருந்தால் உங்களது கடல் காணிப்பு வலயம் செயல்படவில்லையா? உங்களது அமைச்சர் (லலித்) மீதே உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

அதில்சம்பந்தப்பட்டவர்கள் இலங்கையில் தான் இருக்கிறார்கள் என்றால் உங்களது ஆயுதப்படையினர், புலனாய்வுத்துறையினர், உங்களுக்கு உதவியளிக்க வந்துள்ள பயங்கரவாதத்தை முறியடிப்பதில் உலகப் புகழ் பெற்ற ''மொசாட்' என்ன செய்கின்றனர்?'' என்று எதிர்க்கட்சித் தலைவர் ஆவேசப்பட்டார்.

### தொண்டாவுக்கு பாராட்டு

சிரேஷ்ட அமைச்சர்கள் வரிசையில் இருந்துகொண்டே அமைச்சர் தொண்டமான் போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டிருக்கின்றார். அவரது பெயர் உலகசாதனை 'கின்னர்ஸ்' புத்தகத்தில் பதியப்படவேண்டும் என்று பாராட்டினார் அனுரா.

பட்ஜட்டின் வாக்கெடுப்பை அடுத்து அவசரகால நீடிப்பு பிரேரணை மீதான வாக்கெடுப்பும் இடம்பெற்றது.

பட்ஜட்டுக்கு எதிராக வாக்களித்த சுதந்திர கம்யூனிஸ்ட் மக்கள் ஐக்கிய முன்னணி கட்சிகள் அவசரகால நிலை தொடர்பான பிரேரணையின் போது சபையில் இருந்தும் வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை.

---

## யாழ். மாவட்டத்தில்...

[1ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி)

டத்திலுள்ள எவரும் தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தமுடியாது'' என்றும் திரு. அத்துலத்முதலி தெரிவித்தார்.

''அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருப்பின், அது எல்லாரும் பார்க்கக்கூடிய ஓரிடத்தில் ஒட்டப்பட்டிருக்கவேண்டும்.

''பொலிஸ் பிரமாணத்தின் 7-வது சரத்து திருத்தி அமைக்கப்படவுள்ளது. இத்திருத்தச்சட்டமூலத்தின்படி யாழ் மாவட்டத்திலுள்ள சகல மக்களும் தத்தமது வீடுகளில் வசிப்பவர்களின் எண்ணிக்கையையும், அவர்களில் எத்தனை பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸ் நிலையத்துக்குத் தெரிவிக்கவேண்டும் என்றும் திரு அத்துலத்முதலி தெரிவித்தார்.

அனுமதி பெறாமல் வெளியார் எவரையும் வீட்டில் வைத்திருக்கக்கூடாது. அரசாங்கத்துக்குச்சொந்தமான பஸ் வண்டிகள் யாழ்ப்பாணத்திலுள்ள பாதைகளில் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும் தனியார் பஸ்கள் போக்குவரத்துச் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது

பாடசாலைச்சிறுவர்கள், உத்தியோகத்தர்கள் காலை ஆறு மணியிலிருந்து காலை 8-30 மணிக்கு இடைப்பட்ட நேரத்துக்குள் யாழ் நகருக்குள் வரலாம். இவர்கள் யாழ்ப்பாண நகரிலிருந்து பிற்பகல் 2மணியிலிருந்து 4மணிக்குள் தத்தமது இடங்களுக்குச் சென்றுவிடவேண்டும்.

ஒவ்வொருநாளும் மாலை 4 மணியிலிருந்து ஊரடங்குச்சட்டம் அமுலிலிருக்கும். எவரும் எந்த ஒரு காரணத்துக்காகவும் வாகனங்களைக் காலை 6மணி முதல் 8-30மணிவரை பயன்படுத்தமுடியாது.

எரிபொருள் விநியோகமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மின்சக்தி நிலையங்கள் இருக்கும் குதிகள் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

சப்புகஸ்கந்தை எண்ணை சுத்திகரிப்பு நிலையமும் சுற்றுப்புறப்பகுதிகளும் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திற்குள் பிரவேசிக்கும் அனைவரும் செல்லுபடியாகக்கூடிய பிரயாண அனுமதிப்பத்திரங்களை வைத்திருக்கவேண்டும். பாதுகாப்பு வலயங்களுக்குள் பிரவேசிக்கும் போதும், அங்கிருந்து வெளியேறும்போதும் அனுமதி பெற்ற பத்திரங்களை வைத்திருக்கவேண்டும்

தமது வீடுகளுக்கு அருகில் குண்டுகள், அல்லது வெடி மருந்துகள் இருப்பதனைக் கண்டால், அதுபற்றி மக்கள் பாதுகாப்புப் படையினருக்கு அறிவிக்கவேண்டும் ஆயுதங்கள் வெடிமருந்துகள் போன்ற ஏதாவது பொருட்கள் வீடுகளில் காணப்பட்டால், அந்த வீடுகளிலுள்ளவர்களே அதற்குப் பொறுப்பாளியாவர் இதுபற்றிய தகவலைப் பாதுகாப்புப் படையினருக்கு அறிவிப்பவர்களுக்குச் சன்மானம் கிடைக்கும்.

இந்தப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்காலிகமானவை என்று நேற்று அமைச்சர் லலித் தமது உரையில் சொன்னார்.

நாட்டையும், மக்களையும் பாதுகாப்பதற்காகவே இந்தக் சட்டுப்பாடுகள் அமுல் செய்வதாக அமைச்சர் குறிப்பிட்டார்

இந்தக் கஷ்டமான நிலைமையில் மக்கள் தமது அன்றாட அலுவல்களை கட்டுப்படுத்த வேண்டிய நிலைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர்

சமாதானம், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றையும் நாட்டின் இறைமையையும் பேணுவது அரசின் பொறுப்பாகும்

''ஜனவரி மாதம் 14-ஆம் திகதி தமிழ் ஈழப்பிரகடனம் செய்யப்போவதாகச் சில பயங்கரவாதிகள் இந்தியாவில் அறிவித்துள்ளனர்'' என்றும், அடுத்த மாதம் 31-ம் திகதி பாதுகாப்புப் படையினரை வடக்கிலிருந்து வாபஸ்பெறச் செய்வதும் பயங்கரவாதிகளின் ஒரு நோக்கமாகும்'' என்றும் லலித் அத்துலத்முதலி குறிப்பிட்டார்.

''இது உண்மையாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நிலைமையை எதிர்நோக்குவதற்கு அரசு தயாராக உள்ளது 'ஈழம் ராஜ்யம்' அமைக்கப்படுவதை எதிர்ப்பதற்கு இந்த நாட்டிலுள்ள மக்கள் உறுதிபூண்டுள்ளார்கள் என்றும் அமைச்சர் சொன்னார்.

ஆயுதப்படையை வலுப்படுத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

''ஒற்றை ஆட்சிமுறையைப் பாதுகாப்பதற்கு நாம் ஒன்றுபடுவோம் பயங்கரவாதத்தை ஒழிக்க தேசிய பாதுகாப்பு நிதிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது ஜனவரிச் சம்பளத்தை வழங்க வேண்டும்'' என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

பொலிஸ், இராணுவம், கடற்படை ஆகியவற்றின் சீருடையை அணியவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

---

## பொறியியலாளருக்கு துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாட்டின் வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொறியியலாளர் திரு. எஸ் ஆனந்தராஜா [39வயது] நேற்றுப் பிற்பகல் இராணுவத்தால் சுடப்பட்டு, துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ். அஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் சுழிபுரத்தைச் சேர்ந்தவர்.

இவரை இராணுவத்தினர் பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டுசென்றுவிட்டுப் பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகக் கூறப்பட்டது.

---

## சைக்கிள்...

(1ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

களிலும், நேரத்திலுமே வாகனங்களைப் பயன்படுத்தமுடியுமென்றும் கூறினார்.

பாதுகாப்பு வலயத்திற்குள் வருபவர்களும், பாதுகாப்புவலயத்திலிருந்து வெளிச்செல்பவர்களும் உதவி அரசாங்க அதிபரிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமென்றும் அமைச்சர் 'லலித்' தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயத்தில் நடமாடும் உள்ளூர் வாசிகள் தேசிய அடையாள அட்டை வைத்திருக்க வேண்டுமென்றும் வெளிநாட்டுப் பிரஜைகள் கடவுச்சீட்டுக்களை [பாஸ்போர்ட்] வைத்திருக்கவேண்டுமென்றும் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

---

## ரூ. 25,000 நகைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட பிரதம முகாமையாளரின் வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிமுனையில் சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் யாழ். வைமன் வீதியில் உள்ள இலங்கை வங்கி பிரதம முகாமையாளரான எம். கனகரத்தினம் என்பவர் வீட்டில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

இனந்தெரியாத மூன்று நபர்கள் கைத்துப்பாக்கி, கத்தி சகிதம் சென்று தொலைபேசி வயரைத் துண்டித்துவிட்டு வீட்டிலிருந்தவர்களைப் பயமுறுத்தி நகைகளை கொள்ளையடித்துச்சென்றதாக புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

---

## 4,800 தமிழ்...

(1ம்பக்கம்2ம்கலத் தொடர்ச்சி)

வித்தார்.

புறக்கோட்டையில் 148 கடைகள் திடீர் சோதனையிடப்பட்டதாகவும் பொலிஸ் கமிஷனர் திரு நீல் வீரசிங்க தெரிவித்தார்.

---

## டிச. 31க்குள்..

(1ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி)

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நேற்றுப் பாராளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில கூறியதாவது:-

''தைப்பொங்கல் தினத்தன்று தமிழீழத்தைப் பிரகடனம்செய்து கோலாகலமாக விழா எடுக்கத் தீவிரவாதிகள் தயாராகியுள்ளனர்.

''இதனைக் கொண்டாடுவதற்காகவே யாழ்ப்பாணத்தில் யானைத்தந்தங்களும், பீரங்கிகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

''தீவிரவாதிகள் தாக்கிவிட்டு ஓடிவிடும் நடவடிக்கையைக் கைவிட்டுவிட்டு நேரடியாகப் பொலிஸ் நிலையங்களையும், இராணுவ முகாம்களையும் தாக்கத் திட்டமிட்டுள்ளனர். நாம் இவற்றைச் சிறிய விஷயமாகக் கருதக்கூடாது. இதனை முறியடிக்கத் தயார் நிலையில் இருக்கவேண்டும். நாட்டின் நன்மை கருதி அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் இப்பிரச்னையை எதிர்நோக்க ஒன்றுபடவேண்டும்'' என்றார்.

---

## மரண அறிவித்தல்

### திரு. வே. தி. சம்பந்தர்

திரு. வே தி சம்பந்தர் [Retd Electrical Foreman- Chunnakam C. E. B ] 29-11-84 ல் காலமானார். அன்னார் கனகேஸ்வரியின் அன்புக கணவரும், சரணபவானின் [Canada] அன்புத்தந்தையும் ஆவார் ஈமக் கிரியைகள் கட்டுடையில் நடைபெற உள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும். 912

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் -30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.